
உழைப்பே மூலதனம்



மு.கருணாநிதி

BALU BROS

உணர்ச்சிமாலை



A. Singaram

அனுப்பியது

மு. கருணாநிதி

4680
358
NATIONAL LIBRARY
RECEIVED
23. FEB. 1954
No ..T.360.....
KARNATAK DRAVIDIAN
FEDERATION

இரிசன் அறிவுக்கண,
239, காசாயண பிள்ளை தெரு,
பெல்காரூர் சென்னை.

கருணாநிதி பதிப்பகம்,
சிந்தாதிரிபேட்டை, சென்னை-2.

முதற் பதிப்பு—1951

விலை அணா 8

4680

நன்றி

இலட்சியப் பாதையில் செல்லும் புரட்சிப் படையின் இளந் தளபதி தோழர் மு. கருணாநிதி தமிழகத்தைக் கவ்வியிருக் கும் பழமை யிருளைப் போக்க பலதுறைகளி லும் பணிபுரியும் சமுதாயச் சிற்பி. அந்த பேனா வீரர் எமக்களித்த அன்பளிப்பு **உணர்ச்சிமாலை** என்ற இந் நூல், அவர்க்கு எமது உளமிக்க நன்றி.

ஓவியம் வரைந்துதவிய பாலு பிரதர்ஸ், தோழர் கே. ஆர். செல்லமுத்து ஆகியோருக் கும் நன்றி உரித்தாகுக.

எஸ். பி. நாதன்,
பதிப்பகத்தார்.

BODL 11 12 21

RATIONAL LIBRARY
RECEIVED
23. FEB. 1954
No ..T..358.....
KARNATAK DRAVIDIAN
FEDERATION

4680
சே.எண்.....

உணர்ச்சி மாலை

சிங்கத்தின் முழக்கம்,
சிறுத்தையின் பாய்ச்சல்,
வேங்கையின் கம்பீரம்,
புயலின் வேகம்,
இடியின் கர்ச்சனை,
மின்னலின் வீச்சு,
அருவியின் ஓட்டம்,
தென்றலின் தெம்மாங்கு,
நிலவின் குளிர்ச்சி,

இத்தனையும் சேர்ந்ததுதான் பாரதிதாசன் கவிதை. "இனிமைத் தமிழ் மொழி எமது, எமக்கின் பந்தரும்படி வாய்த்த நல் அமுது" வசந்த நடையிலே தமிழ் கொஞ்சுகிறது இங்கே!

இதோ சூருவளியாகச் சுழலும் சொற்கள்:

"வளம்பெரிய தமிழ் நாட்டில் தமிழரல்லார்
வால் நீட்டினுல் உதைதான் கிடைத்திடுங்காண்"

கனல் பொழிகிறது - அனல் கிளம்புகிறது சிங்கம் சினங் காட்டுகிறது. ஆம். கவிஞரின் பேனு முனை சுட்டியாகிறது. இதோ கவிஞர் இல்லமொன்றில் நுழைகிறார் இனிய நறுமணம் பரவுகிறது. இதயகீதம் புறப்படுகிறது.

"தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்
அண்டையிலே மங்கை போய் அத்தான் என்றாள்
அத்தானு தூங்கிடுவான் 'அருகில் உட்கார்' என்றான்".

காதல் இலக்கியம்-நெஞ்ச ஓவியம்-கண்விருந்து - கவிதையிலே தேன் மழை! புயல் நடை மாறித் தென்றலாகத் தவழ்கிறது கவிஞரின் பேனுமுனை!

தாமரை பூத்த குளத்தைக் காண்பார்—அங்கே முகத்தாமரை தோன்ற முழுகிடும் கோமளவல்லியைக் காண்பார், கொள்ளை கொடுத்த உள்ளத்தினன் குப்பனையும் காண்பார்.

குளத்தைக் கண்ட அவர் குதூகலத்தாலேயே முழுகிவிட மாட்டார்...'வியர்வைக்குளம்' எனத் தலைப்புக் கட்டுவார். தொழிலாளியின் ஒவ்வொரு துளி வியர்வையிலும் "இவ்வுலகு உழைப்பவர்க்கே" என்பதைக் காண்பார்.

சிற்றூர்-வரப்பெடுத்த வயல்—ஆறு தேக்கிய நல் வாய்க்கால்-அயோத்யாபுரி வர்ணனையாகக் கொள்ள மாட்டார். நிறையுழைப்புத் தோள்களின் வலிமையால் வந்த வளமென்பார். காக்கையைக் காணுவார்-'சனிபகவானின் வாகனமே' எனப் பாடமாட்டார். "காக்கையிடத்திலுள்ள ஒற்றுமைகண்டு வாழ்க்கை

நடத்திலுல் பயனுண்டு" என அறிவு நல்குவார். மண்-மரம்-செடி-கொடி-பறவை - மிருகம் - மனிதன்-எல்லாம் கவிஞர் பாரதிதாசனின் கவிதைக் கடலிலே மிதக்கும் படகுகள். இராமனைப் பாடினுல்தான் கவிதை-காளி வரம்பெற்றுல்தான் கவிஞன்-இந்த நிலையைத் தலைகுப்புறக் கவிழ்த்தவர் பாரதிதாசன். அவருக்கு மணிவிழா அறுபது ஆண்டுகள் பறந்து விட்டன. மிச்சமிருப்பது நாற்பது ஆண்டுகள் மனித வயதின் கணக்குப்படி! சாகாத கவிதைகள்-இளைக்காத எழுத்துக்கள்-நோய் தழுவா இலக்கியங்கள் கவிஞரால் தமிழ் நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன. அவருக்கு செய்ய வேண்டிய கடமையைத் தமிழகம் ஒருவாறு செய்துவிட்டது. நன்றி தெரிவித்து விட்டது. ஆனல் இது போதாது. நிதியளிப்பதல்ல கடமை! மணிவிழா அல்ல நன்றி!

"வெள்ளம்போல் தமிழர் கூவிடம் வீரங்கொள் கூட்டம் உள்ளத்தால் ஒருவரே! மற்றுடலினுல் பல ராய்க் காண்பார் கள்ளத்தால் நெருங்கொணுதே என வையம் கலங்கக்கண்டு களிக்கும் நாள் எந்த நாளோ!" அந்த நாளை விரைவில் அமைப்பதுதான் நாம் அவருக்குக் காட்டும் நன்றி-கடமை-எல்லாம்! நிதி விழாவும்-மணிவிழாவும் கவிஞரைத் தமிழகத்திலே நன்முக உலவ விடும் மார்க்கங்கள். அவரது கவிதைகளை தமிழரின் உள்ளங்களிலே ஏற்றிவைக்கும் ஏற்பாடுகள். மணிவிழா இதோடு முடிவதல்ல, முடியக் கூடாது. ஆண்டு தோறும் கவிஞருக்கு விழா நடத்த வேண்டும். கவிஞர் இருக்கும் வரையில் மட்டுமல்ல! அவர்தான் சாகாதவராயிற்றே! சாகித்யகர்த்தா தியாகராஜ

அய்யருக்குத் திருவையாறே 'ரகளை'ப் படுகிறது. தஞ்சை மாவட்டம் தமிழர்கள் உலவும் சோலை. ஒரு சாகித்ய கர்த்தாவுக்கு-தமிழ்க்கலைஞர்கட்கு மதிப்பு கொடுக்காத திருவையாற்று 'திருவிழாவிலே புகழ் மாலை! வெட்கக்கேடு. தமிழ் இசைத்தால் மேடை தீட்டாகி விடுகிறதென கூறினர் ஒரு அய்யங்கார் பாடகர் சில ஆண்டுகட்கு முன்பு, திருவையாற்றில்! அந்த எதிர்ப்புக்கு ஆளான பெரும் இசைவாணர் இந்த ஆண்டு திரும்பவும் திருவையாற்றுக் காலிலே விழுந்தார். தமிழரவர். தலைகுனிகிறது தமிழ்நாடு. ஏனென்று கேட்டால் திருவையாற்றிலே நாலைந்து நாள் கொண்டாட்டங்களிலே கலந்து கொண்டால் தான் விளம்பரமாகிறதெனக் கூறுகிறார்கள் பதிலாக!

அந்த நிலையை மாற்றுவோம். அறிவு முழக்கம் செய்வோம். தமிழர் நெஞ்சை பகுத்தறிவுக்கோட்டை யாக அமைப்போம். திருவிடத்தார் திறனுடையார் எனப் பறை சாற்றுவோம். பாரதிதாசனின் விழா அதற்குப் பயன்பட வேண்டுமென்பதே என் ஆசை. ஆண்டுக்கொரு முறை மாவட்டத் தலைநகர்களிலே பாரதிதாசன் விழா மூன்று நான்கு நாட்கள். அங்கே கலைமலர்கள் வாரியிறைக்கப்பட வேண்டும்.

அவை தமிழர் வாழ்விலே மணம் பரப்ப வேண்டும். புரட்சிக் கவிஞரைப்போற்ற நாடெங்கும் கல்லூரிகள் தோன்ற வேண்டும்.

புரட்சி வளர்ந்த கதை

மேதினம்! தொழிலாளர் வாழ்வை வதக்கி அவர் கள் எலும்புகளை மென்றுதின்று தங்கள் மேனியை மெருகேற்றிக் கொண்ட முதலாளி வர்க்கத்தின் மென்னையை இறுக்கிக் கொன்றவரின் கொண்டாட் டம். பீட்டர்ஸ்பர்க் நகரத்துப் பாட்டாளி மக்கள் பசியெனக்கதறியதற்காக அவர்களை ரத்தத்தில் மிதக்க விட்டு கோரச் சிரிப்பு சிரித்த கோமான்களின் குரல் வளையை அமுக்கியவர்களின் குதூகல விழா.

மலைப்பாம்பினுங்கொடிய மதம் மாய்ந்தது மக் களின் வாழ்வைக் குடித்து ஏப்பமிட்ட பணக்காரப் பேய்க்கும்பலின் 'பவிசு' குறைந்தது...கஷ்டப்பட்ட தை—கண்ணீர் விட்டதை—கலங்கி நின்றதை—கதி யிலை எனக் கதறியதை கண்ணெடுத்தும் பாராமல் கற்களாய் நின்று அறிவைக் காவுகொண்ட கடவுள் கூட்டத்தின் வம்சம் பூண்டற்றுப் போனது—என்ற மகிழ்ச்சியை நரம்புகளில் ஏற்றிக்கொண்டு இரஷ்யப் பாட்டாளி மக்கள்—ஏன் உலகப் பாட்டாளி மக்கள் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் பிணமாக வீற்றிருக்கிற மாவீரன் இலெனினை நினைத்துக்கொண்டு வீரநடை போடுகின்ற வெற்றி விழா!

மனித சாதியின் உயர்வுக்கே ஏணியாக—வாழ் வுக்கு வழிகாட்டியாக—அமைந்தது மே தினம்.

1917 மார்ச் மாதம் 8-ம் நாள் புரட்சி உருவாயிற்று இரஷ்யாவில்! பீட் ரோகிராட் நகரில் உள்ள நெசவுத் தொழிலாளப் பெண்கள் புரட்சி பவனி நடத்தினர். 1917 நவம்பர் 7-ம் நாள் சோவியத் அரசாங்கம் தோற்று விக்கப்பட்டது. இலெனின் அமைச்சர் குழுவின் தலைவன் புரட்சிகளுக் கெல்லாம் வித்தாக இருந்தது ஓரு தியாகியின் புன்னகை. 1905ல் அடக்கு முறை தாங்கமாட்டாமல் துடித்தெழுந்த ஓரு இளைஞன், நிக்கோலாஸ் மன்னனின் நெருங்கிய உறவினனை உயர்தர இராணுவ உத்தியோகஸ்தன் சொக்கியஸ் கோமகனை பட்டப்பகலில் கொன்று குவித்தான். கொலை செய்தவன் நிலை குலைந்து ஓடவில்லை சமுதாயத்திற்குத் தேவையான ஓரு காரியத்தை செய்ததாகவே எண்ணினான். போலீஸ் அதிகாரிகள் அந்தக் கொலைகாரனிடம் ஏதாவது வாக்கு மூலம் வாங்கிவிடவேண்டுமென தலைகீழாய் நின்று பார்த்தார்கள். ஓரு எழுத்து கூட எழுதிக்கொள்ள முடியவில்லை எப்படியும் சாகப் போகிறோம் என்ற நெஞ்சுரம் அவனை ஊமையாக ஆக்கிவிட்டது, மௌனமாகவே இருந்தான். தூக்கு மேடையிலே நிறுத்தப்பட்டான். "கொலைகாரனே! உன் உயிரைக் குடிக்கப் போகிறேன்" என்று கும்மாளம் போட்டது தூக்குமேடை. அப்பொழுது தான் அவன் உதடுகள் அசைந்தன. பேசுவதற்கல்ல புன் சிரிப்புக்காக! அந்தப் புன்சிரிப்பிலே எவ்வளவு பெரிய பயங்கரமான புரட்சிப் பொறி பறந்தது தெரியுமா? சொக்கியஸ் கோமகனை சாக அடித்தான். தான் சாவதற்கு சிரித்தான். சமுதாயம் தன்னை மறவாது...என்ற திருப்தி—இரஷ்ய வரலாறு தன்னை ஒதுக்கிவிடாது

என்ற நம்பிக்கை—இவைதான் அந்த வாலிபனின் இத ழோரப் புன்னகை. சாவின் சிரிப்பு!

அந்த சிரிப்பு மறைவதற்குள் நாட்டிலே வேலை நிறுத்தங்கள் எழுந்தன. வேலை நிறுத்தத்திற்கு ஜார் அரசாங்கத்தால் வேட்டு வைக்கமுடியவில்லை. அர சாங்கம் தினறியது. எட்டுமாத காலம் வேலை நிறுத் தம் வெற்றிகரமாக வாழ்ந்தது. ஜப்பானுடன் சமர் செய்த இரஷ்யா சரண் புகுந்த வேளையது. ஜனசமுதா யம் ஜார் ஆட்சியைக் காரி உமிழ்ந்தது. புரட்சி வளர்ந் தது. 1906 ம் ஆண்டில் 'டூமா' கூடிற்று. சீர்திருத் தங்கள் சில செய்ய அந்த 'டூமா' விரும்பியது டூமாவின் சிருஷ்டிகர்த்தா ஜார்!...சிருஷ்டி கர்த்தாவே டூமாவை சிதைத்தான். காரணம்; அது நல்லவை செய்ய எண்ணி யது தான். டூமா என்றால் ஜனப்பிரதிநிதி சபை என்று பொருள். இது ஜாருக்கு பிடித்திருந்தால் லெனின் பிறந்திருக்க வேண்டியதில்லை. 1907-ல் டூமாவுக்கு தேர்தல் நடைபெற்றது. ஜாரின் வால் பிடிப்போர் வெற்றி பெற்றுங்கூட...அவர்கள் வாயிலும் தப்பித்த வறி நல்ல பேச்சுக்கள் வந்துவிட்டன. இரண்டாவது டூமாவும் இறந்தது. இல்லை...சாக அடிக்கப்பட்டது, ஜாரால்!

வயது வந்த எல்லோருக்கும் ஓட்டுரிமை இருப்பது ஜாருக்கு பிடிக்கவில்லை. மேல் அந்தஸ்தினருக்கே ஓட்டுரிமை அளித்து மூன்றுவது டூமாவுக்கு தேர்தல் நடத்தினன். அது ஐந்து ஆண்டுகள் உயிரோடிருந் தது. 1912-ல் நான்காவது டூமாவின் தேர்தல். அது முதல் ஜார் ஆட்சியின் அடிபீடம் ஆடத்தொடங் கிற்று.

அரசன், அறிவை விலை கேட்பவன். ஆண்மை எந்தக் கடையில் விற்கும் என விசாரிப்பவன். ஆனல், அக்கிரமத்தின் மொத்த வியாபாரியாக விளங்கினவன். தன்மனைவியின் தளிர்க்கரங்களே அவனுக்கு செங் கோல்!...அவளது அந்தப்புறமே அவனுக்கு சபாமண் டபம். லீலா விநோதங்களே அவனுக்கு சட்டபுத்தகம். மதுவுண்ட மந்தியை தேள் தீண்டிடுவதுபோல் ரஸ் புடீன் என்ற மதவாதி அவனை நெருங்கினன். ரஸ் புடீன்-ஜாரின் மனைவி இருவரும் கிழித்த கோட்டை ஜார் தாண்டுவதில்லை, இரஷ்யாவின் மங்கையற்கரசி யும்—குலச் சிறையுமானர்கள் அவர்கள்!...ஜார் சாய்ந் ததற்கு இவர்களே பூகம்பமாயினர். கொடுமை தாண்டவமாடிற்று. அணையப்போகும் விளக்காக ஆயிற்று அது!...போல்ஷ்வெக்கர் கட்சியினர் தூக் கில் தொங்கினர்கள். புரட்சி புகைய ஆரம்பித்தது.

அது எரிமலை என்பதை அந்த ஏமாளி மன்னன் உணரவில்லை. அதே நேரத்தில் 1914 வந்தது. உலக மகாயுத்தத்தின் கோரைப் பற்கள் நீட்டப்பட்டன. கூரிய நகங்கள் எட்டிப்பார்த்தன. போரில் கலந்து கொண்ட இரஷ்யா 1915-ல் டான்னென்-பெர்க்கில் ஜெர்மானியரிடம் படுதோல்வி கண்டது துவண்டு போன மன்னன் ஒரு புது மந்திரி சபை அமைக்க எண்ணினன். அந்த எண்ணத்தை வளர விடாமல் தீய்த்து விட்டனர், மன்னன் மனைவியும்—மாபாதகன் ரஸ்புடீனும்!

1916-ல்.....மன்னர் குடும்பத்தில் மற்றொரு கொலை. 1905.ல் தூக்கு மேடையில் சிரித்தானே ஒரு சிங்கக்குட்டி...அவன் சிரிப்பின் எதிரொலி.....1916-ல்

ரஸ்புடீனை சுட்டுக்கொன்றது. அடக்கு முறை குமுறிற்று. புரட்சியும் கொந்தளித்தது.

போர் முனையிலே ஜார்! இங்கோ புரட்சிக்கொடியை பெண்கள் பறக்கவிட்டனர், 1917 மார்ச் எட்டாம் நாள்!

ரஷ்ய தலைநகரம் 'கிடுகிடு' வென நடுங்கிற்று. யுத்தகளத்திலிருந்த படியே உத்திரவிட்டான் ஜார், 'சுட்டுத் தள்ளுங்கள்' என்று!

யார் யாரைச்சுடுவது? எரிமலைகள் பொங்கி வழியும் போது அதை எதிர்க்க எண்ணெய்க் கிணறுகளா?

தானே நேரில் புறப்பட்டான் ஜார்! அவன் வந்த புகைவண்டிக்கு பாதை கிடையாது, நாடாண்ட மன்னதி மன்னனின் கதி...இதுவென ஏங்கிஞள் ஜாரின் மனைவி. காடாளும் காண்டா மிருகமவன் என கர்ச்சனை புரிந்தது மக்கள் உள்ளம். ஜனப்பிரதிநிதி சபையின் அவசரக்கூட்டம் கூடியது. புரட்சியை அடக்க ஒரேவழிதான் தெரிந்தது அவர் கட்கு! அது தான் "ஜார் அரசனின் முடிதுறப்பு வைபவம்"

ரோமனுல் அரச வம்சத்திற்கே அன்றுதான் முடி துறப்பு விழா. முதலாளி—மதவாதி வர்க்கத்திற்கே அன்று இரஷ்யாவில் இடுகாடு கட்டப்பட்டது, புதிதாக! சாகாவரம் பெற்றிருந்த முதலாளி மதவாதிக் கூட்டங்கள் சிரஞ்சீவிப் பட்டத்தையிழந்து சிதையில் ஏற்றப்பட்டன. அந்தக் கொடுங்கோலர் கூட்டத்தின் உயிர்த்தோழனை கடவுளீயம் "சிதையே சிதையே" என்று பாடிற்று.

புரட்சி அடங்கிற்று. மழை ஓய்ந்தது. தூறல் நிற்கவில்லை.

சுமார் எட்டுமாதங்கள் இரஷ்யாவில் சில்லறைக் குழப்பங்கள். தொழிலாளர் சக்தி முழுவதையும் போல்ஷ் வெக்கட்சியின் பக்கம் திரட்டத் திட்டம் போட்டான் இலெனின். 1917 நவம்பர் ஏழாம் நாள் அகில இரஷ்ய சோவியத் காங்கிரஸ் பீட்ரோ கிரோட் டில் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே போல்ஷ் வெக்படையினர், அரசாங்கத்தைக் கைபற்றிக் கொண்டனர். தற்காலீக அரசாங்கத்தின் பிரதம மந்திரி **கெரென்ஸ்கி** பெண் வேடத்தில் தப்பியோடி னர். சோவியத் அரசாங்கம் நிறுவப்பட்டது. இல்லை ...புதுவாழ்வுக்கு கால்கோல் விழா செய்யப்பட்டது. அந்தவெற்றிச் சிரிப்புதான் இன்றைய மேதினத்திலே எதிரொலிக்கிறது அந்த எதிரொலி திராவிடத்தில் இன ஓலியை—சுயமரியாதை ஓலியை எழுப்புமா?

போகிறான்;போகிறான்..!

கூறிய முட்கள் கைகளைக் கீறிடினும் மலர் கொய்யத் தாவும் குமரியின் கரங்கள்.

மூச்சை நிறுத்திவிடும் பயங்கர அலைகள் இருப்பினும் முத்தெடுக்க நினைக்கும் மனித உள்ளம்.

பாறைகள் இடிந்து உடலை நசுக்கிவிடும், என்பதறிந்தும் பொன்னெடுக்க சுரங்கந் தோண்டும் மானிட ஜாதி.

மலரும்-முத்தும் - பொன்னும் இலட்சியங்களாகின்றன. முள்ளும்-கடலும்-பாறையு இடையூறுகளாகின்றன. இடையூறுகளுக்கு அஞ்சாத பண்புகொண்டவன் இலட்சியப் பாதையை நோக்கி நடந்தபடியிருக்கிறான்.

அந்த இலட்சிய வீரன் எதற்கும் கலங்காத காளை.

"இடுக்கண் வருங்கால் நகுக," இந்தக் குறள் அவன் மூச்சு.

'இலட்சியமே என் உயிர்' இது அவன் பேச்சு.

கொடுமைகள் கோர நர்த்தனம் செய்யும்போதும் அவன் குதூகலமாகத்தான் தன் பயணத்தை நடத்துவான்.

தன் எதிரே தனக்குக் தடையாக நிற்கும் மனிதர் களை அவன் மாமிச மலையென்பான். நசுங்கிப் போன சுயச் செம்பே! என நையாண்டி செய்வான்.

"என்னை இப்படிப் பேசச் சொல்வது இதயத்தில் பீறிடும் இறுமாப்பல்ல! உன் கண்களிலே தாண்டவ மாடுகிறதே...அந்த கோரம்! உன் உதடுகளின் இடுக் கில் வழிகிறதே அந்த அலட்சியம்! உன் உள்ளத்தில் பொங்குகிறதே அந்த நஞ்சுக் குழம்பு! இவைதான் என்னை அமைதியிழக்கச் செய்கின்றன" என்று தன் ஆத்திரத்தித்திற்கு விளக்கம் கூறுவான்.

அவன் புகழுக்காக ஆசைப் பட்டு பொதுநலப் பணியில் குதிக்கவில்லை. அவனுக்குத் தெரியும் அந்த வேலை சருக்கு மரம் ஏறும் கதை யென்று! அவனறி வான் பொதுப்பணி—குமுறிவரும் வெள்ளப் பெருக் கில் எதிர் நீச்சல் போடும் செயல் என்று! எதிர் இயக் கத்தார் ஏவுகிற கணைகள் சொந்த இயக்கத்தார் சொரு குகிற சூட்டிகள் - இவைகளை எதிர்பார்த்தே அந்த இலட்சியக்காரன் களத்தில் உலவுகிறான்.

பாசிபிடித்த ரத்தக்குட்டைகளாக - உளுத்துப் போன எலும்புக் கூண்டுகளாக-செல் மொய்த்த நரம் புக் கூடுகளாக மக்கள் வாழ்வது அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

வாழ்வதற்குப் பகையாக இருக்கும் அத்தனை சக்தி களையும் அவன் நேர் நின்று தாக்குகிறான். மகாத்மாக் கள் போற்றி வந்த மதமா? மரவுரிதரித்த நாள் முதல் வணங்கி வந்த கடவுளா? மதத்தின் தலைவர்களா? கட வுளின் பிரதிநிதிகளா? அத்தனையும் அவன் சிந்தனைப் பட்டரையில் தூள்! தூள்!

சமூதாய துரோகிகள், சுயநல பெருச்சாளிகள், இலட்சிய முத்திரை குத்திக்கொண்டு இழி தொழிலில் சூடு படுவோர், பரிகசிப்போர், பின்னிருந்து பேசுவோர், உறுமுவோர், உதைப்பேன் என்போர்; இந்த பட்டியல் அவன் உறுதியின் முன்னே எரிந்து கருகும்.

"பார்! பார்!...பசலைப் பயலே! உன் செல்வாக்கை செல்லாக்காசாக்குகிறேன்" எனக் குமுறும் ஒரு பொருமை உருவம்.

"நான் உன் போல் புகழில் நெளியும் பூச்சியல்லவே நீ என் புகழுக்குத் தோண்டும் குழி உன்னையும் உன்போன்ற சதைக் குன்றுகளையும்விழுங்கிஜீரணித்து என் அழியாத புகழுக்கு அஸ்திவாரமும் அமைக்கும்" அன்று வீரமுழக்கம் செய்வான்.

இதோ பாரப்பா.....மாட மாளிகை. மரகதக் குவியல், மனதிற்கேற்ற உல்லாசபுரி, இங்கே வந்தால் மல்லிகையில் படுக்கலாம், வெல்வெட்டுக் கம்பளத்தில் நடக்கலாம், என்ற மோகவலை வீசப்படும். துறவியைப் போல பேசி தூர நிற்பான். இலட்சிய வாதி.

காயமே இது பொய்யடா-காற்றடைத்த பையடா என்ற 'நீர்மேற்குமிழி பஜனை' நடத்திக்காட்டப்படும்.

கண்மூடிகளிடம் காட்டப்பா உன் கைவரிசையை எனக்கேலி செய்வான் எச்சரிக்கை.அபாய அறிவிப்பு-உடனடி நடவடிக்கை-பாகு மொழி-பாசாங்கு வேலை இத்தனை உருவங்களில் அழிவு அவனை அண்ட வருகிறது.

ஆனால் அந்த இலட்சிய வீரன் தன் பாதையிலேயே போகிறான்-போகிறான்-போய்க் கொண்டே இருக்கிறான்.

இராவணன்

நம் பாட்டன்

கொசுவின் தாயகம். உயிர்க்குடிக்கும் பல்வகைப் புழுக்களின் பிறப்பிடம். கண்ணுல் காணமுடியாத தொலைவிலேயே மூக்கைப் பிடித்துக்கொள்ளக் கூடிய நாற்றம். கழிவுப்பொருள்களின் முடிவிடம்-ஆபாசத் தின் எல்லை. இம்மாதிரி ஒரு குட்டையைக் காணு கிறுன் மனிதன். ஆகா! இதோ நெளியும் புழுக்களின் நேர்மைதான் என்னே...பரத நாட்டியமாடும் பாவை யரைப் போலல்லவா வளைந்து வளைந்து ஓடுகின்றன. பகவானின் படைப்பே; படைப்பு! இந்த மணத்தை எங்கும் நுகர்ந்திட முடியாதே என்று கூறி அந்த சேற்றிலே விழுந்து புரளுகிறுன்.

அடுத்த மனிதன் குட்டையின் நாற்றத்தைப் போக்கினுல் பலன் உண்டு எனக் கூறுகிறுன். வாசனைப் பொருள்களை அச்சிறு குளத்தில் ஊற்றினுல் பயன் கிடைக்கு மென்பது அவன் முடிவு.

மூன்ருவது மனிதன் குட்டையின் தண்ணீரை யெல்லாம் இறைத்துவிட்டுக் குட்டையைக் குளமாக்கி புதுத் தண்ணீரைப் பாய்ச்சி தக்கதோர் மருந்து கலந் தால் மக்களுக்குப் பயன் தரும் என்கிறுன்.

இந்த மூன்றுவகைத் தோழர்களில் உங்கள் 'ஓட்' யாருக்கு என்பது 'என் கேள்வியல்ல! மேலே குறிப் பிட்ட நாற்றக் குட்டையாக நமது தமிழ்நாட்டுக் கலை அமைந்துள்ளதே அதைத் திருத்த வேண்டாமா என் பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை மீண்டும் கிளப்பவேண்டிய அவசியத்தை ஒரு தோழர் ஏற் படுத்தியுள்ளார். பிழைப்புக்கும் செல்வாக்குக்கும் பாதை அமைத்துக் கொள்வதற்காக ஒரு சிலர் கலைக் குட்டையிலே விழுந்து புரளுவது எனக்குத் தெரியும். சேறு அவர்களுக்கு சந்தனமாகவும், சேற்றிலே கிளம் பும் நாற்றம் அவர்களுக்கு மல்லிகையில் மோதி வரும் தென்றலாகவும் தோன்றுகிறதாம். அவர்களைத் திருத் தவோ அல்லது திருப்பவோ நினைப்பது நாயின்வாலை நிமிர்க்க நினைப்பது போலத்தான் என்பதும் எனக்குப் புரியும். புரிந்த போதிலும் இவர்களுடைய வலை வீச்சில் திராவிட இளைஞர்கள் சிக்கிவிடலாகாது என் பதற்காகவே; "பாம்பே! கடிக்காமலிரு, தேளே! கொட்டாமலிரு!" என்று அகிம்சா உபதேசம் செய்வதைவிட அவை 'விஷ ஜந்துக்கள் விலகிப் போங்கள்' என்று எச்சரிக்கை செய்வதை நோக்க மாகக் கொண்டுள்ளேன்.

வாழை, மா, பலா, என்ற முக்கனியின் கூட்டில் வசிய மருந்து கலப்பதுண்டு. வண்ணப் புதுச்சேலை-வாலிப மேற்பூச்சு இவைகளோடு, வயதேறிய மாது வலை வீசுவதுண்டு.

இந்த வகையைச் சேர்ந்த கட்டுரையொன்றை நான் கான நேர்ந்தது, ஆர். எம். அழகப்ப செட்டி யாரை ஆசிரியராகக் கொண்ட "குமுதம்" என்ற

மாத வெளியீட்டில் ஒரு கலாரசிகர். தீட்டியுள்ளது. கட்டுரையின் தலைப்பு **இராவணன் நம் பாட்டன்** தலைப்பைக்கண்டதும்.....அழகப்பாவின் பத்திரி கையிலும் இன உணர்ச்சி வாடை வீசுகிறதே என துள்ளிக் குதித்தேன். நான் நினைத்தது முழுத்தவறு என்பதை மெய்ப்பிப்பது போல் தலைப்பின் ஓரத்தில் பத்து தலை இராவணன் படம் விளங்கிற்று. இருந்தா லும் தலைப்பிலே கலந்திருந்த அந்த இன உணர்ச்சி என்னைப் படிக்கத் தூண்டிற்று. இராவணன் நம் பாட்டன்! ஆகா! தென்னிலங்கை வேந்தன்—தீராத தீரன்—திராவிடரின் மூதாதை—அவனை நம் பாட்டன் என்று உரிமை கொண்டாடும் உண்மைத் தோழனுக்கு 'குமுத'த்திலே இடமா? எனக் கூத்தாடிற்று என் உள்ளம்.

படிக்க ஆரம்பித்தேன்; "தோள் கண்டார் தோளே கண்டார்" என்ற கம்பனின் வர்ணனையைத் துவங்கி யிருந்தார் தோழர்! இராவணன் நம் பாட்டன் என்று கூறிவிட்டு...இராமனின் அழகை வர்ணிக்கும் கட்டத்தில் நிற்கிறாரே ஏன் என்று எனக்கு முதலில் புரியவில்லை. கம்பரின் வர்ணனையைப் புகழ்ந்து.... அடட! கடவுளீயக் கலையை சிருஷ்டித்திருக்கிறாரே கம்பநாட்டாழ்வார் எனக் காவடிச்சிந்து பாடுவதோடு கட்டுரையாளர் நிறுத்திவிடுவார்; கம்பர்தருங் காட்சி, கம்பசித்திரம், சித்திர ராமாயணம் இந்த வர்க்கத்தைச் சேர்ந்த இழைப்பு வேலையாக இருக்கும் இதுவென எண்ணினேன். ஆனால் கட்டுரையாளர், வாலிபனை மயக்க வண்ணப்புதுச் சேலை யுடுத்திவந்த வயோதிக மாது என்பதை நன்றாக நிரூபித்துக்கொண்டுள்ளார்.

"கலை என்னும் கடவுள்பொருளின் உண்மை இயல்பை உணர்ந்துவிட்டால் இந்தப் பிணக்குக்கு கலையுலகில் இடமில்லை. அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்ததோர் அழகுக்கோலம் தாங்குவது கலை. ஒருவர் காட்சி மற்றவர்க்கு ஏலாது, இதை உணர்ந்தால் எரிக்கும் வெறியும் சுரிக்கும் வெறியும் கலையுலகில் இடம்பெறமாட்டா".

ஆசிரியர் புகுத்தியுள்ள கருத்து இது!...இதைத்தான் கனிச்சாற்றில் கலந்த 'வசிய மருந்து' என நான் கூறுகிறேன். சோற்று உருண்டையைக் காட்டி மீனைத் தூண்டிலில் சிக்க வைக்கும் சூழ்ச்சியைப் போல் இராவணன் நம் பாட்டன் என்ற தலைப்பைக் காட்டி கம்பர் கலையெனும் தூண்டில் முள்ளில் இளைஞர்களை சிக்க வைக்க முயற்சிக்கிறார் தோழர்.

பசுமலை பாரதியும், பண்டித சேதுப்பிள்ளையும் நிற்க முடியாத இடத்திலே நிற்க நினைக்கிறார் தோழர். சரிந்து விழுந்த கம்பராமாயணக் கட்டிடத்தைப் புதுப்பிக்க சாரம் கட்டுகிறார் அன்பர். பாவம் பரிதாபத்திற்குரியவர். "கலை வாழ்க! ஆலை கலை, நாற்றக் குட்டையாக-புழுக்கள் நெரியும் இடமாக உள்ள நிலை ஒழிக!" இதுதான் பகுத்தறிவாளனின் பாசறை முழக்கம். இந்த முழக்கம் முன்னமேயே கம்பர், சேக்கிழார் போன்ற இனத் துரோகிகளின் முதுகெலும்பை முறித்து விட்டது என்பதை நண்பர் அறிந்திருந்தும் நச்சுப்பல்லை நீட்டியிருக்கிறார். ஆபாசக் குட்டையின் அழுகல் நாற்றத்தை அந்திமல்லிகையின் வாடை யெனக் கூறும் ரகம் இவர்! முகத்தின் சுருக்கங்களை முக்காட்டால் மறைத்துக்கொண்டு என் முல்லைச்

சிரிப்பைப் பார் எனக்கூறும் மூதாட்டிக்கும் தோழரின் கட்டுரைக்கும் முரண்பாடிருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. குட்டையின் நாற்றத்தை அகற்ற அத்தரும் ஜவ்வாதும் போடு எனக் கூறுகிறவரின் வரிசையில் கூட தோழர் இடம் பெறுதது வருந்தத் தக்கது.

திரிக்கும் வெறி கலை யுலகில் இடம்பெறக் கூடாது என தோழர் கூறுவதிலிருந்து நாற்றக் குட்டையில் வாசனைப் பொருள் கலப்பவரின் வரிசை யில்கூட நிற்கமுடியாமல் வழுக்கிவிழுந்து டி. கே. சிதம்பரநாதர்களின் மேலும் சீறிப் பாய்கிறார் என்பது விளங்குகிறது.

எரிக்கும் வெறி என எழுதியதால் சுயமரியாதை இயக்கத்திற்கு சூடு கொடுத்துவிட்டதாக அன்பர் சொல்லிக் கொள்ளலாம். அழகப்பாவின் 'அப்ளாசை' யும் பெற்றிருக்கலாம். கையிலிருப்பது பேனு என்பது கூட தெரியாமல் கலை போதையில் கிறுக்கியிருக்கிறார் ஆசிரியர்!

கம்பராமாயணத்தைக் கொளுத்துவதா? இல் லையா? என்ற சொற்போரில் அறிஞர் அண்ணாதுரையை எதிர்த்து மேடையில் நிற்கமுடியாமல் சேதுப்பிள்ளைக் குத் தலைவலியும், சோமசுந்தர பாரதியாருக்கு பிரயாண அவசரமும் ஏற்பட்டதை இந்தக்க லைக் காதலர் மறந்துவிட்டது மாபெரும் ஆச்சரியம்.

"அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்ததோர் அழகுக் கோலம் தாங்குவது கலை" எனக் கூறுகிற ஆசிரியர். கொள்ளைக்காரன் கொள்ளையடிக்கும் தொழிலைக் கலையாகக் கொள்வதையும், விபசாரி...வாலிபர்களை

மயக்கிக் கவிழ்ப்பதைக் கலையாகக் கொள்வதையும், அதற்கென அவர்கள் கம்ப ராமாயணத்தில் தொழிலுக்கேற்ற சுவையான கட்டங்களைத் தேடுவதையும்— அதற்காகவே அவர்கள் கம்பர் கலையை ஏத்திப் புகழ்வதையும் ஒத்துக் கொள்கிறீரா என்பது என் கேள்வி!

''ஒருவர் காட்சி மற்றவர்க்கு ஏலாது'' என்கிறீர். உண்மை. எரிக்கும் எண்ணம் சுயமரியாதைக்காரர்களுக்கு ஏற்பட இது காரணமாகுமா என்று கேட்கிறேன்.

இனக்கொலை செய்தார் கம்பர். சாதாரண மனிதனை சகத் ரக்ஷகளுக்கிக் காட்டினர் கம்பர்.

கடவுளின் காதையைப் பாட வந்த இடத்திலும் காமலீலைகளுக்கு முதல் ஸ்தானம் அளித்தார் கம்பர்.

இந்தக் குற்றச் சாட்டுகள்தான் கம்பர் கலையைக் கொளுத்தியெறியும் தீக்குச்சுகள் என்பதை குமுதத்தின் வியாசகர்த்தா தெரிந்துகொள்ள வேண்டும்.

கம்பரின் உயிரைக் காப்பாற்ற கட்டுரையாளர், கவிஞர் பாரதிதாசனின் ''**சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்**'' ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்திருக்கிறார். இராம பக்தரல்லவா? கம்பரின் வர்ணனைகள் நம்பத் தகாதவை என்கிறீர்களே; பாரதிதாசன் பாடியுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற கவிதையில் ஒரு பச்சிலையின் உதவியால் இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களில் பேசுவோரை குப்பனும் வஞ்சியும் பார்க்க முடிந்தது என்கிறாரே இந்த வர்ணனையை நம்பலாமா? என்கின்ற தோரணையில் தோழர் பிரச்சினையை எழுப்பு

கிறார். அளவு மீறிய வர்ணனைக்காக கம்பராமா யணத்தை கசக்கிறது என்று கூறியவர்களல்ல நாம்! கூறுபவர்களுமல்ல.

இராமன் அயோத்தியைத் துறந்து ஆரண்யம் சென்றபோது நகரத்து மக்கள் அழுதனர் எனக் கூறு வதோடு நிறுத்தாமல் "பூவையர் அழுதனர் பூனையும் அழுதது" எனக் கம்பர் வர்ணனையை நீட்டியது. கண்டு கூட நாம் வருந்தவில்லை. பூனை அழுமா? என்று கேட்கவுமில்லை. வர்ணனையின் உச்சம் என நாம் விதி விலக்கு அளித்தோம்.

பூவையர் அழுத கண்ணீர் போகும் பாதையை கம்பர் வர்ணிக்கிற கட்டம்தான், அண்ணலின் கம்ப ரசத்திற்கும், அறிவு உலகத்தின் "அக்கினியில் போடு கம்பராயணத்தை" என்ற தீர்ப்புக்கும் இடமளித்தது என்பதை தோழர் உட்பட யாரும் மறுக்க முடியாது.

இதுவரை படிக்காம லிருந்தால் பகுத்தறிவா ளரைக் குறை கூறும் நண்பர், படித்துப் பார்க்கட்டும் என்பதற்காக எஞ்சியுள்ள கம்பரசத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கலக்கித் தருகிறேன்; பருகட்டும் தோழர் என்பதற்காக! கலை மயக்கம் தெளியட்டும் என்பதற்காக!

இராமன் காடு செல்கிறான். அயோத்தி அழுகிறது. ஆரணங்குகள் அழுகிறார்கள். அழுத கண்ணீர் ஆறுக ஓடுகிறது பாருங்கள்.

"திடருடைக் குங்குமச் சேறும் சாந்தமும்,
இடையிடை வண்டலிட்டாரமீர்த்தன.

மிடைமுலைக் குவடேறி மேகலைத் தடங்
கடலிடைப் புகுந்தகட் குழுதியாரரோ!"

பொழிப்புரையாகக் : கூறுவதே போதுமென என்னுகிறேன் ; அண்ணு அவர்கள் கம்பரச புத்தகத்தில் அதிக விளக்கம் இருப்பதால் அதைப் படித்துக் கொள்ளட்டும் என்ற அளவில்!

இராமன் பிரிவால் மங்கையர் கண்ணில் வடியும் நீர், ஆருகப் பெருகி குங்குமத்தையும் மையையும் கரைத்துக்கொண்டு, மணிமாலைகளைக் கடந்து, ஸ்தனங்கள் என்ற மலைகளில் ஏறி மேகலாபரணம் அணிந்திருக்கிற "மறைவிடம்" எனப்படும் கடலில் விழுகிறது.

"எழுதவே வெட்கமாயிருக்கிறது தோழரே!..... இந்தக் காமக்கலை கடவுளின் பேரால் பாடப்பட வேண்டுமா என்று கேட்பது உமக்கு வெறிச்செயலாகப் படுகிறதா?" எனக் கலாரசிகரான என் நண்பரைக் கேட்கிறேன்.

ஒருவேளை "அவரவர் நிலைக்கு ஏற்ப அமைந்த தோர் அழகுக் கோலம் தாங்குவது கலை." என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பவராயிருக்கலாம் நண்பர்!

பாரதிதாசனையும்—கம்பரையும் ஒரே கோட்டில் நிறுத்திப் பார்க்கும் தோழர், பாரதிதாசனின் கவிதையில் இந்தக் காமக் களஞ்சியத்தைக் காணமுடியுமா என்று அறை கூவியழைக்கிறேன். வர்ணனைக்கும் அளவிருக்க வேண்டாமா? அதுவும் பரந்தாமன் சரித்திரத்திலா இந்தப் பள்ளியறைச் சிறப்பு?...

"கலைஞர், களியர், பித்தர், பக்தர்—இவர்கள் பெரும்பாலும் ஒரு நிலையினர். அவர்களை உணர அவர்களாகவே மாறத்தான் வேண்டும். முடியவில்லை என்றால் ஒதுங்கிவிட வேண்டியதுதான்." என்று முடிவு கூறுகிறார் கட்டுரையாளர். கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பவன்.....விவாதத்தை வளர்த்த முடியாமல், நீ பேசுவது விதண்டாவாதங்கள் என்று கூறிவிட்டு ஓடுவதுபோலிருக்கிறது தோழரின் போக்கு! மூக்கையறுத்துக் கொள்ளுங்கள்....கடவுளை தரிசிக்கலாம் எனக் கூறிய மூக்கறையனின் தந்திரத்தைப் போலிருக்கிறது தோழரின் அபிப்பிராயம்.

சொட்டையுள்ள இடத்தை சுட்டிக் காட்டுகிறான் சுயமரியாதைக்காரன். "பொட்டைக் கண் உனக்கு" என்று பொய் கூறுகிறார் நண்பர்!

"கம்ப ராமாயணத்தில் கடவுளீயம் இல்லை. கதை உண்மையில்லை. இராமன் சாதாரண மனிதன். தமிழ் அழகுக்காக...கலை நுட்பத்திற்காக மட்டும் படியுங்கள். இராமனைக் கடவுளென எண்ணி சீதா கல்யாணமும், அனுமாருக்கு வடைமாலை சாற்றும் வைபவமும் நடத்தாதீர்கள்" என்று ஒரு முன்னுரை எழுதிவிட்டு கம்ப ராமாயணத்தை அச்சிடுவதற்குத் துணியாத தோழர், பெருந்தகை,...செல்வர் வீட்டுக் குமுதத் திலே சீர்திருத்த வாதியின் மேல் சீற்றம் நடத்துவது ஏனோ தெரியவில்லை.

மக்கள் பண்பு உயர, கலை தேவையே தவிர மாட மாளிகையிலே—மலர்ச் சோலையிலே—மஞ்சத்திலே—மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் கிடக்க, மங்கையர்

வனப்பை வர்ணித்து ஆனந்த லாகிரியில் அமிழ்ந்து கிடக்க, கண்ணீரானது கரை புரண்டு கடலில் கலக்கும் விதத்திற்கு உதாரணம் தேட, கலே தேவையில்லை.

கலே காலத்தின் கண்ணுடியாக...இன எழுச்சியின் முரசமாக இருக்கவேண்டும். கம்பரின் காதை...காமக் கோட்டத்தின் கீதம். கடவுளீயத்தில் மக்களைக் கவிழ்த்து சதிபுரியும் சிந்து! வேற்றினத்துக்கு வணங்கிச்சாகும் வேதனையைத்தந்த வெண்பா! நான் முதலில் குறிப்பிட்டபடி கலேயை நாற்றக் குட்டையாக்கி நெளிகின்ற புழுக்கூட்டம்.

சேலம் மாநாட்டிலே கம்பர் கதையை நெருப்பில் போட வில்லையே தவிர சேதுப்பிள்ளை—பாரதியார் தோல்வி, கம்பராமாயணத்துக்கு மூட்டப்பட்ட தீ என்பதை தோழர் அறியவேண்டும்.

"காமாலேக் கண்ணின்றி, கலேமாலேக் கண் கொண்டு நோக்கவேண்டும்.....இப்படியாக உள்ள சில உண்மைகளை உணராதவரை இராவணன் நம் பாட்டன்தான், சூர்ப்பனகை நம் பாட்டிதான்." என்று கிண்டல் செய்து கட்டுரையை முடிக்கிறார் கம்ப பக்தர்!

தோழர் எழுதுவதற்கு இடங் கொடுத்த குமுதத்தின் கௌரவ ஆசிரியர் அழகப்ப செட்டியார் அவர்கள் எப்பொழுதாவது புது டெல்லிக்குப் போனல் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைக் கேட்கட்டும்; ராமாயணத்தில் அரக்கர் என்று குறிக்கப்படுவோர் யாரென்று! "ராமாயணத்தில் அரக்கர் என்று எழுதப்

பட்டிருப்பவர் தென்னாட்டிலுள்ள திராவிடர்.'' என ஜவஹர்லால் நேரு, செட்டியாரிடம்...தான் முன்பு தீட்டிய '' ஜவஹர்லால் தன் மகளுக்கு எழுதிய கடிதங் கள் '' என்ற புத்தகத்திலிருந்து ஆதாரம் எடுத்துக் காட்டுவார். அப்பொழுது தெரியும்; இராவணன் நம் பாட்டனா; இல்லையா? என்பது ஏது மறியாத இந்தத் தோழருக்கு; இதைத் தவிர வேறு பதிலில்லை.

இங்கல்ல! இரஷ்யாவில்

காக்கைபாடினியார்
நச்செள்ளையார்
காவற்பெண்டு
பாரிமகளிர்
பெருங்கோப் பெண்டு
வெண்ணிக்குயத்தியார்
வெறிபாடிய காமக் கண்ணியார்

புதுப் பெயர்களல்ல! புறநானூற்றிலே பொதிந்து கிடக்கும் புதையல்கள் பலவற்றின் படைப்பாளர்கள். பெண்கள்! அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பேதுக்கடி என லாலிபாடும் பாட்டிகள்.....பத்தாம்பசலிகள் நிறைந்துள்ள இன்றைய திராவிடத்தின் வரலாற்றில் ஒன்று இரண்டு பக்கங்களிலே காணப்படும் மங்கையர் கும்பல்!

கவிதை மழை பொழிந்த தமிழரசிகள்! தமிழுக்கே தனிப்பெருமை தந்த தங்கக் கொடிகள்! வீரத்தின் பீடத்திலே அமர்த்தி வெற்றி மாலை சூட்டி, வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித்தோள்கள் என காளையரைத் தட்டிக் கொடுத்து, கங்கையைப்போல் காவேரியைப்போல் கருத்துரை கவிதைகளை, உணர்ச்சி கொப்பளிக்க, பெருக்கெடுக்கச் செய்த பெருமாட்டிகள்!

"மகன் போன இடமறியேன் அப்புலி வாழ்ந்த குகையிதோ!" என தாயொருத்தி வயிற்றைக் காட்டிலுள் என்ற வீர முழக்கத்தை விருத்தமாக்கினவர்—என் பாலைக்குடித்தவளு பகைவனின் ஈட்டியை முதுகிலுல் தாங்கிளுன்.....அவன் பால் குடித்த மார்பின் ரத்தத்தை இந்த வாள் குடிக்கட்டும் என ஆவேசக் கூச்சல் போட்ட கிழவி யொருத்தியின் எழுச்சியை இதய கீதமாக்கினவர்—"தந்தை மாண்டார். சோதரர் செத்தார், என் இளம் மகனே! இங்கே வா! இந்தா வேல்! இந்நாடு உன் உதிரத்தாலும் நனையட்டும்" என்று தலைவாரி பூச்சூடி களத்திற்கு பசலைப் பையனை அனுப்பிய தாயின் நாட்டுப் பற்றை சிங்க நடைச் செய்யுளாக ஆக்கியவர்—ஆம் மேலே காணப்படும் பெண் புலிகள் தான்!

அவர்கள் இருந்த திராவிடம்.....அவர்களுடைய கல்லறைகளின் மேல் அமர்ந்து அவர்கள் தந்த தமிழ்ச் சொத்துக்களை வீசி யெறிந்துவிட்டு மாரியம்மன் தாலாட்டை மனப்பாடம் செய்கிறது. புறநானூறு இங்கிருந்து புறப்பட்டு இதோ இரஷ்யாவில் புகுந்து விட்டது.

சென்ற போராட்டத்தில் இடோகியோ நிஜூவிலு என்பவர் ஆகாய விமானம் மூலமாக 600 தடவை பறந்து சென்று விரோதிகளின் விலாவை ஒடித்து... வேகமான தாக்குதல்கள் நடத்தி திரும்பினர், இடோகியோ நிஜூலிலு. ஆனல்ல! பெண்! பெண்!!

இங்கு ஏணை! அங்கு ஏரோப்ளேன்! இங்கு அரசமரம்! அங்கு ஆராய்ச்சிக்கூடம்!

1945-பிப்ரவரி 1-ந் தேதி வரையில் 10,55,000 பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டதின் காரணமாக பற்பல வகையான வீரப்பிரதாப பட்டங்களைப் பெற்றனர்.

அங்கே புறநானூறு! இங்கே புற்றடி மாரியம்மன் கோயில் சிந்து!

கூட்டுப்பண்ணை போன்ற அமைப்புகளில் தலைவர், பொருளாளர், செயலாளர், பதவிகளில் 1940-ஆம் ஆண்டு முடிய 54,200 பெண்கள் உள்ளனர்.

அறிவு, இரஷ்யாவில்! அடுப்பங்கரை இந் நாட்டில்!

நிஜூலை உட்பட 49-பெண்கள் எதிரிகளின் முதுகெலும்பை முறித்து நாட்டுத் தொண்டாற்றினர் கள் என்பதற்காக "சோவியத் யூனியன் வீரர்" (Hero of the Soviet union) என்ற விருதுபெற்றுள்ளனர்.

"ஆகா அசல் சீதேவி மாதிரி குணம்" "அருந்ததி மாதிரி அடக்கம்" "அகல்யாமாதிரி அழகு" "திரௌபதி மாதிரி கற்பு" இந்தப் பட்டங்கள் இங்கே, இருண்ட திராவிடத்தில்!

புறநானூறு இங்கு புதைந்துவிட்டது.

அங்கே.....இரஷ்யாவில் ஒளி வீசுகிறது.

3, 57, 90.

"என்ன துணிவப்பா இது"

"எப்படியப்பா எழுதினன் இந்த மனுஷன்"

"வாயில் வந்தபடி பேசுகிறனே வகை கெட்டவன்"

"ஆட்டு மந்தைப்போல் ஒரு கூட்டம் நம்மைப் பின்பற்ற இருக்கும்போது இவனுக்கு மட்டு மென்ன அறிவு கொழுந்து விடுகிறதாம்"

"ஆளை உயிரோடு விடுவதே ஆபத்து"

"இவன் இருக்கும் வரையில் நாம் தலை தூக்க முடியாது போலிருக்கே"

"விஷத்தை யல்லவா வாரி யிறைக்கிறன் விரியன் பாம்பு"

இப்படி சொல்லம்புகள் மாறி மாறி வீசப்பட்டன அந்த வீரர் மேல். வீரர் கலங்கவில்லை. விலாவொடிந்து போனாலும், வெட்டுண்டு சாய்ந்தாலும் கவலைப்படாத வைர நெஞ்சத்தினர் அவர். மனதிற் பட்டதை மறைத்துப் பேசும் கோழைத் தனமோ, கால் கழுவி வாழ நினைக்கும் கபோதித் தன்மையோ, சுய நலத்திற்காக

சூதர்களை சுற்றி, நிற்கும் சோதாப் பண்போ அவர் இதயத்தை எட்டிப் பார்க்கவுமில்லை.

"ஏய் நாஸ்திகனே!.....நீ நாசமாய்ப் போக"

"வகுப்பு வாத விஷ விருக்ஷமே.....உன்னை வாழ விடுகிறோமா பார்!"

இந்த வசவுகளை வாழ்த்தாக நினைத்தார்.

"வகுப்பு வாரி பிரதி நிதித்துவம் வேண்டும்" அந்தக் குரலை சற்று பலமாக அமைத்தார். திருப்பித் திருப்பிச் சொன்னார். அடிக்கடி சொன்னார். அதற்காகவே வாழ்வை அர்ப்பணிக்க வந்துவிட்டார். புத்தன் முதல்...இராமலிங்கன் வரையில் கூறுவதற்கு கடுங்கிய கொள்கைகளை இன்று துணிவாகச் சொல்வதென்றால்—அதுவும் நம்மவர் காலடியில் நாட்டாட்சி கிடக்கிற வேளையில் சொல்வதென்றால்.....என்று ஆச்சரியப்பட்ட ஆரியம் தனது பாகு மொழியையே பலி பீடமாக அமைத்து திராவிட சமுதாயத்தைக் காவு கொள்ள ஆரம்பித்தது.

அய்யோ.....அந்த பலி பீடத்தில் சாய்ந்தவர் எத்தனை பேர்!

காமராசர்கள், முத்துரங்கர்கள், பக்தவத்சலர்கள், கிராமணியர்கள், நாடி முத்துக்கள், தியாகராசர்கள்.....

"சகோதரர்களே.....வகுப்பு வாதத்தில் வழுக்கி விழாதீர்கள். நாம் பாரதத் தாயின் கர்ப்பத்தில் கிடந்த புதல்வர்கள்"

பூணூலை உருவிக் கொண்டே ஆரியம் பேச..... புன் சிரிப்பு நெளிய திராவிட விபீஷணர்கள் கர கோஷம் செய்ய.....காங்கிரஸ் கட்சி வளர்ந்தது.

வகுப்புக்கள் ஒழிந்தால் தான் வகுப்பு வாதம் ஒழியும்.....அதுவரை நாம் வாழ—வளம்பெற வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் தேவை.....ஆரியம் ஒற்றுமை வலை விரிக்கும் ஒன்றே குல மென்று கூறும், உம்மை யெலாம் ஒதிய மரங்களாக்கி உயர்ந்த ஸ்தானங்களில் அமர்ந்து உல்லாசம் பேசும். அது ஒரு ஓநாய்க்கூட்டம்.

இந்தக் கருத்தை அந்த வீரர் எடுத்துரைத்தார். வேதியர் அவரை நாஸ்திகர் என்றனர். விபீஷணர்கள் அவரை வகுப்பு வாதி என்றனர். விழித்துக் கொண்ட மக்கள் அவரை மதித் தலைவர் என்றனர். விபீஷணர் விழிப்படைய—விழித்துக் கொண்டவர் விளக்கம் பெற உதவி புரியும் வகையில் நாம் தரவேண்டிய செய்தி ஒன்றுளது.

"திருப்பதி ஓரியண்டல் கல்லூரியில் பொது உணவு முறை ;ஏற்படுத்துவதுபற்றி அரசாங்கம் வற்புறுத்துகிறது. தேவஸ்தானக் கமிட்டியார், அரசாங்கத்தை இவ் வுத்திரவுபற்றி புனராலோசனை செய்யுமாறும், பொது உணவு முறையில் கலந்துகொள்ளச் சம்மதிக்காத மாணவர்களுக்குத் தற்காலம் கொடுக்கப்பட்டு வரும் உபகாரச் சம்பளத்தை தொடர்ந்து கொடுக்க அனுமதிக்குமாறும் வேண்டிக்கொள்கிறது. ஆனால் அரசாங்கத்தார் இது பற்றி புனராலோசனை செய்யத் தயாராக இல்லை, என்று அறிகிறேன். ஓரியண்டல்

கல்லூரியில் 150 மாணவர்கள் இருக்கிறார்கள். பிராமண மாணவர்கள் 90 பேர் இருக்கின்றனர். ஹரிஜன மாணவர்கள் 3 பேர்களே உள்ளனர். பிராமண மாணவர்களும், பிராமணரல்லாத மாணவர்களும், பொது உணவு முறை ஏற்படுத்தப்பட்டாலும், தனியாக உண்ண விரும்புபவருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது நிறுத்தப்பட்டாலும் கல்லூரியை விட்டு விலகிவிட ஒரே முகமாக விரும்புகின்றனர். அரசாங்கத்தை இது பற்றி மீண்டும் தெளிவாக—தாராள மனப்பான்மையுடன் சிந்திக்கும்படி வேண்டிக்கொண்டும் பொது உணவு முறையை ஏற்க மறுக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளத்தை தொடர்ந்து கொடுக்குமாறு தேவஸ்தான கமிட்டியையும் வேண்டிக்கொள்கிறேன்''

வகுப்புவாதத்தை திராவிடக் கும்பல் நாட்டில் பரப்புகிறது என்று பிரச்சாரம் செய்கிற பிராமணைத் தம குலத்துப் பெம்மான் ஸ்ரீ துரைசாமி அய்யங்காரின் இந்த அறிக்கை 29-5-48 மெயிலில் காணப்படுகிறது.

கல்லூரி மாணவர்கள் நூற்றியைம்பது பேர். நூற்றுக்கு மூவராய் வாழும் பார்ப்பன குலத்தவர் அந்தக் கல்லூரியில் தொண்ணூறு பேர்! நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேராயுள்ள திராவிட மாணவர்கள் அங்கு ஐம்பத்தேழு பேர். படிப்பில்லா சமுதாயமாக பாழ்பட்டு நிற்கும் பழங்குடி வகுப்பினர் மூன்று பேர்.

சதவிகிதக் கணக்குப்படி 100-க்கு 60 பார்ப்பனர்; 100-க்கு 38 (பார்ப்பனரல்லாத) திராவிடர்; 100-க்கு

2 பேர் ஆதிதிராவிடர். இந்த அழகில் அங்கேயும் ஒரு குருகுலத்தை சிருஷ்டிக்க நினைக்கிறார் ஆரிய குல மகிபர்.

எல்லோரும் அன்னை பாரததேவியின் அருந்தவப் புதல்வர்கள் என்று கீதம் பாடிய கூட்டம் இன்று பேதம் பாடுகிறது. அதற்கு தலையாட்டும் பொம்மை களாக சில தன் மான மற்ற திராவிடரையும் துணைக் கழைக்கிறது.

நாம்.....பரிதாபமாக...வயிற்றெரிச்சலோடு ..... விழியிலே நீர்வழிய கெஞ்சுகின்றதோரணையில்...ரத்தப் பாசம் விடாமல்...மன்றுடிக் கேட்டுக் கொள்கிறோம் அந்த 57 பேரை நோக்கி!.....ஐம்பத்து ஏழுவரே!... வகுப்புவாரி பிரிதிநிதித்துவத்தை ஏளனம் செய்து... கீழ்பாக்கம் வைத்திய சாலையை கிண்டலுக்கு பயன் படுத்துகிற வெறியர் கூட்டத்தின் செயலை சற்று சீர் தூக்கிப்பாருங்கள். நீங்கள் மக்கள் கணக்கில் 97 சத விகிதத்தினர். அவர்கள் மூன்று சதவிகிதத்தினர். ஓரி யண்டல் கல்லூரியில் நீங்கள் 57 பேர், அவர்கள் 90 பேர். உங்களுக்கும், அவர்களுக்கும் உட்கார, உலவ, உல்லாசம் அனுபவிக்க உழைத்து உழைத்து உரு மாறிய—இரத்தத்தை வியர்வையாக மாற்றிய வமூசத்தவர் மூவர்.

அந்த மூவரையும் மூலையில் தள்ள ஆரியத்தின் மூளை அஸ்திவாரம் அமைக்கிறது. பலம் தேடிக் கொள்ள உங்களையும் பிணைத்துக் கொண்டு பேசுகிறது.

ஆம்.....ஆஞ்சநேய சுக்ரீவர்களை துணைக்கழைத் துக் கொண்டு வெற்றிப் பண் பாடியது போல—சர்

ராமசாமிகளை, சண்முகங்களை இழத்துக் கொண்டு தன் சமுதாயத்தை காத்துக்கொண்டது போல துரை சாமி அய்யங்காருக்கு உங்கள் 57 பேரின் துணை தேவை யாயிருக்கிறது. அந்த மூன்று பேரையும் மூன்று துளி நஞ்சாகக் கருதுகிறார் உங்கள் 57 பேரையும் 57 பிர பிரஹலாதர்களாக 57 கருவேப்பிலைகளாகக் கருது கிறார்.

நீங்கள் அறுபது பேராகுங்கள். ஆரியம் தொண் ணூறும் அந்த முனையில் நிற்கட்டும். திராவிட இன உணர்ச்சியை இனி மேலாவது, காற்றில் பறக்கவிட்டு மீளாத பழியை சுமத்திக் கொள்ளாதீர்கள். இதையே தான் நாம் அரசாங்கத்தாருக்கும் அறிவிக்க வேண்டி யுளது.

கல்லூரியை விட்டு தொண்ணூறு பூணூலும், என் ஐம்பத்தி ஏழுவரும், கண்ணிருந்தும் குருடராய்— காட்டுமிராண்டித் தன்மையராய் அவர்களோடுசேர்ந்து விக நேர்ந்தாலும்...அந்த மூவருக்காக—புது சமு தாயத்தின் அந்த அஸ்திவாரக் கற்களுக்காக...ஓரியண் டல் கல்லூரியை நடத்தும் துணிவை ஏற்றுக் கொள் ளுங்கள் என்ற கோரிக்கையை "உள்ள ஓலி"யாக்கித் தருகிறோம். எம்மை வகுப்பு வாதி என்னும்—பெரி யோரே! திராவிட இயக்கத்தாரை குறுகிய மனப் பான்மை படைத்தோர் எனக் கூறுவோரே! வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்து நிற்போரே! மீண் டும் கருத்தில் பதிய வையுங்கள் அந்த எண்களை! 3, 57, 90.

30-1-1948

இந்திய உப கண்டத்தின் வரலாற்றில் இரத்தக் கரை படிந்த நாள். மக்கள் உகுத்த இரத்தக் கண்ணீர் அருவி யென ஓடி அரபிக் கடலில் கலந்து...வங்களாக் குடாக்கடலில் "வழிந்தோட.....காந்தி மாண்டாரா?" என்ற கேள்விக்கு முன் கிளம்பிய பெரு மூச்சு இமயத்தை அசைக்க—இப்படி ஒரு சோக பூகம்பம் 30—1—48-ல்!

உத்தமர் காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ! சுடப்பட்டார்! பிரார்த்தனைக்குத்தான் வந்தாராம்.....வேலும் வாளும் ஏந்தி வேற்றுர்ப்படை எங்கே என்று அவர் அதட்டலாக கேட்ட நேரத்தில் அல்ல!.....அன்பு தவழும் மொழிகளில் பிரார்த்தனைக்கு மக்கள் வந்துவிட்டனரா என்று வினவிய நேரத்தில்.....சுடப்பட்டார்! கனல் கக்கும் கண்களோடு...கட்டாரியை எறிந்த காட்டானையைப் போல் எதிரியின்மேல் மோதிய வேளையில் அல்ல—கருணை பொங்கும் கண்களால் தன் உபதேசங்கேட்க வந்திருந்த மக்களைக் கண்டானந்தித்த வேளையில்.....சுடப்பட்டார்!

சுடப்பட்டார்....சுடப்பட்டார்.....சுக்குநூறுக்கப்பட்டார்!.....

30 ந் தேதி மோகனப் புன்னகையார் மோகன் தாஸ் காந்தி !.....31-ந் தேதி.....அய்யய்யோ...முறிந் தும் எரிந்தும் போன எலும்புத் துண்டுகள் !..... ஒரு முட்டாள் வீசிய மூன்று குண்டுகள் முரட்டுத் தனத் தையும் மௌடீக மதவெறியையும் போக்குவதற்கு முயன்ற ஒரு தியாகியின் வாழ்வை முடித்தன.

"ஏ ! துப்பாக்கிக் குண்டே !...அந்த துன்மார்க் கன் செய்த துரோக வேலைக்கு நீயும் துணையா ?...எப் படித்தான்...அண்ணல் காந்தியின் அன்பு கனியும் இரு தயத்தைப் பிளந்தெறிந்தாயோ ?"...என்று இந்தக் கண்டம் அழுகிறது. ஏன்...உலகமே அழுகிறது.

காந்தியாரின் உயிரை உறிஞ்சியவன் ஒரு பார்ப் பனன், ஆம்...சாம்ராஜ்யங்களை சாய்த்த பரம்பரை ! மன்னுதி மன்னர்களை மண்கவிழச் செய்த மரபு !... அந்த இனம் கக்கிய ஒரு துளி விஷம் காந்தியார் உயி ரை சூறையாடிற்று. அந்த வைதீகம் வீசிய ஒரு வஞ் சகவாள் வார்தா உத்தமரின் வாழ்வை வெட்டித் தள்ளிற்று. அந்த மதவெறி செய்த சதி.....ஒரு மாபெரும் வீரருக்கு மரணத்தீர்ப்பு வழங்கிற்று.....

இந்தியா கண்ணீர் வீடுகிறது.....இந்து மகா சபை இனிப்பு வழங்கிற்றும். ஆச்சரியப்பட வில்லை நாம் ! ஓமான் கடலில் சர். செல்வத்தின் வாழ்வு சிதைந்த போது சர்க்கரை வழங்கிய ஆரியக் கூட்டம் வாழ்கிற திராவிடத்தில் நாமும் வாழ்வதால் ! காந் தியாரின் கொள்கைகளில் நமக்கு கருத்து வேற்றுமை யுண்டு. ஆனல் நாம் கல் நெஞ்சர்களல்ல !...காந்தி யாரின் தியாகத்தையும்.....அவர் மேலான உழைப்

பையும்...அவர் ஊக்கத்தையும்...நாம் பாராட்டியவர் கள்!...அதே நேரத்தில் காந்தியாரின் தொண்டு பல பதவி வேட்டைக் காரர்களுக்கும் பனியா.....பார்ப் பனர்களுக்கும் பயன் படுகிறது என்றும் சொல்லத் தவறுதவர்கள்!...

காந்தியாரே!.....தங்கள் உழைப்பின் பெரும் பகுதியைக் கூலியாகக் கொடுத்து...இக் கண்டத்திற்கு ஓரளவு விடுதலை வாங்கித்தந்தீரே!...விடுதலை...உண் மை விடுதலையாக மாறுவதற்கு முன்...பதவி வேட டை ஒய்வதற்கு முன் தேசீயத்தில் தெகிடுதத்தம் கலந்து விட்டது என்று தாங்கள் எழுதி...அந்த அறி வுரை ஆட்சியாளரை நல்வழிப் படுத்துவதற்கு முன், நாசத்திற்காளானீரே!...

'சுதந்தரம்' கிடைத்த ஆறுவது மாதத்தில்—இந்த அகால சாக்காடா?—அதுவும் தங்களுக்கா?—தாங்கள் என்ன மதவெறியை வளர்த்தீர்களா?—அமைதியைக் குலைத்தீர்களா? அராஜகத்திற்கு காரணகர்த்தாவா யிருந்தீர்களா?—இல்லையே!—பிறகேன் இந்தப் படு கொலை! மதவெறி—பதவிவெறி பாபப்பனீய வெறி... இது தான் பதிலா?—சுதந்திர இந்தியாவில்—யாருக்கா கப்பாடு பட்டீர்களோ அந்த சமுதாயத்தின் ஒரு மலைப் பாம்பால் விழுங்கப்பட்டீர்கள் என்பது—அவமானம் வெட்கக் கேடு...இந்த உபகண்டத்திற்கேற்பட்ட..... மாறுத இழிச்சொல்!.....

30—1—1948...ஆமாம்...வரலாற்றை வீணாக்கிய நாள்!

பத்தினியே உன்போல்...!

"ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி என்கிறூர் களே அது எப்படிப் பொருந்தும்?"

"ஐவர் என்றுல் ஐந்து பஞ்ச பூதங்கள், காந்திஜி கூட அரிஜன் பத்திரிகையில் அப்படித்தான் வியாக் யானம் செய்திருக்கிறூர். எல்லாம் தத்துவார்த்தம்"

"பஞ்ச பூதங்களா?.....சரி...அவள் கர்ணன் மேலுங் காதல கொண்டாளாமே அந்த ஆறுவது பூதம் எதுவோ?"

"....." பதில் இல்லை.

"பருவமடையாத குந்தி தேவி கர்ணன் என்ற பாலகனை கன்னத்தால் பெற்றுள்! அது எப்படி முடியும்?"

"பகவத் அனுக்ரகம், வரப்பிரசாதம்"

"பால்யத்திலே சூரிய பகவானைக் கூடி பிள்ளை பெற்றவள் பிறகு பாண்டு மகாராஜாவை மணந்து பத்தினி தன்மைக்கு ஏற்றதா?"

"அட பாவி...சூரியனை அவள் கூடினுளா? டே நாக்கு அழுகிவிடுமடா! அநியாயம் பேசாதே! குந்தி தேவி குளிகை சாப்பிட்டாள். சூரியன் வந்தார். வரம் தந்தார். உடனே கர்ணன் தோன்றினன். பார்த்தது மோகினி பொய் பேசாதேடா பாவிப்பயலே!"

"ஓகோ அப்படியா!...சரி! பாண்டுவை மணந்த குந்தி தேவி யமதர்மனுக்கு தர்மரையும், வாயுபக வானுக்கு பீமரையும், இந்திரனுக்கு அர்ச்சுனரையும் பெற்றுளாமே...அது?"

"அதிலும் தோஷமில்லே, யமன், வாயு, இந்திரன் மூவரையும் குந்தி தேவி கையால் தொடவில்லே. குளி கையை சாப்பிட்டாள். அவர்கள் பிரத்யக்ஷமானர்கள் அவள் கும்பிட்டாள். குழந்தைகள் தோன்றினர்கள். இதெல்லாம் தத்துவார்த்த மடா தருதலே!"

* * *

வயதில் பெரியவரை எதிர்த்துப் பேசுவானேன் என்று கேள்வி கேட்ட வாலிபன் திரும்பி விடுகிறான். அல்லது சாக்கடையில் சவ்வாது மணமா கிளம்பும் என்ற திருப்தியோடு பேச்சை முடித்து விடுகிறான்.

ஆனல் ஒன்று...தத்துவார்த்த முக்காடு போட்டு தகராறுப் புராணங்களைக் காப்பாற்றப் புறப்படும் பிரசங்க பூஷணங்கள் ஸ்ரீ ஜத் கோவிந்தராஜ அய்யங் காரால் எழுதப்பட்டு 1937-ல் வெளியிடப்பட்ட **வில்லிபாரதவசனம்** 43-ம் பக்கத்தைச் சற்றுப் புரட் டிப் பார்க்கட்டும்.

குழந்தை வேண்டி குந்தி குளிகை சாப்பிடு கிறாள். இந்திரன் தோன்றுகிறான். தோன்றியவன் குந்தியைத் தொடாமல்..அவள் துவளாமல்..."வரந் தந்தேன்" என்று சொல்லி மறைந்து விட வில்லை. படி யுங்கள், அய்யங்காரே கூறுகிறார் அழ்காக! சுவை கூட்டி!

"பீதாம்பரமும் பொன்னுபரணமும் தலையில்

முடியும், வில்லும் தோளும், வேலும் கையும், வீரகண்டையும் விளங்கத் தோன்றிய எழில் தன்னைக் கண்டு மனங்களி கூர்ந்து மங்கை குந்தியும் காமக்கனி யெனக் கட்டி அணைத்தனள். ஏந்தினன் இந்திரன். தாங்கிய கையுடன் தையலைத்தழுவி அமளியிற் கடத்தி அருங்கலையுடனே அணைந்தனன் பன் முறை (ஒரு முறையல்ல).

இன்பக்கடலில் இறங்கிய மாது அன்பே உருவாய்த் தன் பெருந் தேவுடன் கூடிக் கூடி குலவிக் குலவி ஆடியாடி அகங்களி கூர அவனே தானுய்தானே அவனுய் ஒருருவாகிப் பெருங்களிப்புடனே பெற்றனள் போகம், கலவியிற் களைத்து மண்ணையும் மறந்து தன்னையும் மறந்தாள்!''

மன்னன் பாண்டுவின் மனைவி மாற்றுன் மடியிலே இந்த மயக்கம் காணுகிறுள், இதை நமது வைதீகப் பித்தர்களிடம் காட்டினுல்...''குடிகேடா! குருடா! பத்தினியைப்பழிக்காதேடா!'' என்று குதிப்பார்கள், வரத்தால் பிறந்த குழந்தைகளப்பா பாண்டவர்கள் என்று பழைய கள்ளையே புதிய கலயத்தில் ஊற்றி கால-க்ஷேபம் செய்வார்கள். இந்திரன்-குந்தி இவர்களின் இன்பலோக வர்ணனையை அய்யங்கார் ஒருவரே தீட்டியுள்ளதை நாம் எடுத்து நீட்டினுல் ''பாரா முகம் உன்னையே'' என்று வெறுத்துப் பேசிவிட்டு பாஞ்சாலி, குந்தி சிலைகளுக்கு முன் நின்று ''பத்தினியே உன் போல் இத்தரை மீதினில்'' என்று பாட ஆரம் பித்து விடுவார்கள்.

என் செய்வது? எதிர்காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

அன்னை நாகம்மையார்!

பெரியார் ராமசாமி அவர்கள் இளைஞர் ராமசாமி யாக இருந்த காலம் வரலாற்று ஆசிரியர்களுக்கு சுவை யூட்டும் பகுதி.

பொதுநலவாழ்வில் அவருக்கு கிடைத்த பட்டம் பெரியார். இளமையில்—சுயநல வாழ்வில் 'மைனர்-காலி'-என்ற மகுடங்கள் ராமசாமிக்கு அணிவிக்கப் பட்டிருந்தன. அவருடைய பத்தொன்பதாவது வய தில் நாகம்மையார் வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தார்கள். பருவகால மாறுதல்கள் அவர்களைப் பிணைப்பதற்கு முன் விளையாட்டுப் பருவத்திலேயே அந்தக் கொழுந்து உள்ளங்கள் கூடிக் குலாவிக் கொண்டன,

"'நான் உன்னையே மணப்பேன்; வேறு யாரை யும் மணக்க மாட்டேன்" இந்த உறுதி தளும்பும் காதல் தொனி அந்த இளம் வீணைகளில் ஒரே சமயத் தில் அதிர்ந்து ஒலித்தது, இராம சாமிக்கு வயது 19! வாலிபம் அவருடைய உடற்கட்டில் நர்த்தனம் செய்த காலம்! 'பிள்ளையாண்டானுக்கு சீக்கிரத்தில் ஒரு கட்டையைக் கட்டிவிட வேண்டும்' என்று பெற்றோர் கள் தீர்மானிக்கிற அளவுக்கு வாலிப ராமசாமி "நல்ல பிள்ளை" என்று பெயர் எடுத்தார்.

நாகம்மையின் 13-வது வயதில் பெண் கேட்கப் பலர் வந்துவந்து போயினர். அம்மையாரின் அபிப் பிராயத்தை அசைக்க முடியவில்லை. ராமசாமியின் உரு வம் அழியாத ஓவியமாக தன் உள்ளத்தில் தீட்டப்பட் டிருப்பதை அவர்கள் காட்டத் தவறவில்லை. அந்தப் புது மலரைப் பறித்துக்கொண்டுபோக ஒரு ஆசைக் காரத் தாத்தாவும் வந்தார். இரண்டு மனைவிகளை இழந்த அந்தக் கிழம், வாலிப ஓய்யாரங் கொட்டிக் கொண்டு சம்பந்தம் பேச வந்தது, நாகம்மா நெருப்பு மொழிகளை இறைத்தார்கள். அந்த அனல் வீச்சில் "மணந்தால் ராமசாமியை மணப்பேன்; இன்றேல் தற்கொலை செய்துகொண்டு இறப்பேன்," என்ற தீப் பொறிச் சொற்கள் தெரித்துக் கிளம்பி பெற்றோர் களின் பிடிவாதத்தைத் தீய்த்தன, 'லாயத்திலே தள்ளி அடைக்கப்படும் குதிரைக்கும் கனைத்திட உத்தர வுண்டு' என்ற புரட்சிக் கவிதைக்கு எடுத்துக்காட்டாக சிறுமி நாகம்மா நின்றார்கள், கிழ மாப்பிள்ளை வந்த வழியே நடையைக் கட்டினர்; 13 வயது சிறுமி தன் வாழ்வைத் தானே பண்படுத்திக் கொண்டார்,

இங்கே ராமசாமியாருக்கு செல்வக் குடும்பங் களில் பெண் தேடினர்கள். "சீமான் வீட்டுச்சிங்காரி தேவை யில்லை. என் சிந்தையில் குடியேறியவள் தான் என் குடும்ப விளக்காக வேண்டும்" என்று கூறி விட்டார் ராமசாமி.

தாய் தந்தையர் முடிவுப்படிதான் மணம் செய்து கொள்ள வேண்டுமென்று, மணமக்களை மந்தை மாடு கள் சேர்ப்பதென எண்ணியிருந்த காலமது. ஆம் 1898! அப்பொழுதே காதல்புரட்சி செய்தவர்கள் ராமசாமி—நாகம்மா!

வெற்றியின் சின்னமாக அவர்கள் திருமணம் அமைந்தது.

வெள்ளத்திலேடொரு வெள்ளமாய்க் கலந்து விட்ட அவர்கள் இன்பவாழ்வு, முப்பத்திஐந்து ஆண்டுகள் நடைபெற்றது. 1933 வரையில்! ராமசாமி-நாகம்மா குடும்ப வாழ்க்கையில் சிந்தனையைக் கிளறும் நிகழ்ச்சிகள்—பகுத்தறிவைத் தூண்டும் பல குறும்புகள்—பெண் உயர்வுக்கான சம்பவங்கள் பல! பல!

வாலிப ராமசாமி-வயதேறிய ராமசாமிப் பெரியாராக ஆனகாலத்திலும் அம்மையாரிடம் கொண்டிருந்த அன்பு வரண்டு விடவில்லை. வற்றுத உயிராறுகவே பெருக்கெடுத் தோடியது.

கிழவர் ராமசாமியைப் பார்த்து யாராவது "பெரியவர்; வயதேறியவர்; கிழவர்," என்று சொன்னுல், உடனே அவர் நாகம் மையாரைக் காட்டி "என்னே அப்படிச் சொல்லாதீர்கள் அந்தம்மாளுக்குக் கோபம்வரும்" என்பார். அப்பொழுது பார்க்க வேண்டுமே நாகம்மாவின் ஆனந்தத்தை! அன்பு தவழும் கண்களால் பெரியாரின் வார்த்தையை ஆமோதிப்பார் அம்மையார்! ஆமாம்! அவர்கள் உள்ளத்தால் இளங் காதலர்கள் தான்! இல்லற வாழ்விலும் பொது வாழ்விலும். நீங்காத துணையாக நின்ற நாகம்மையாரை 11-5-1933-ல் பெரியார் இழந்தார். ஆனல் அவர் துக்கத்தால் துவண்டு போய்ப் படுத்துவிடவில்லை. மறு நாளே 12—5—1933ல் பெரியார் திருச்சியில் ஒரு கிறிஸ்துவ திருமணத்தை 144 செக்ஷனை மீறி நடத்திவைத்து கைது செய்யப்பட்டார். காதலையும் மீறிய கடமை, பெரியாரின் வாழ்வுக்கே புது இலக்கியம் கோர்த்தது.

கவிதையல்ல -
கண்ணீர்க்கடல்!

[செல்வத்தை நினைக்கையிலே சிந்திய
கண்ணீர்த்துளிகள்.]

இருட்டறையில் இருகண்கள் மூடிக்கொண்டு,
உருட்டுகின்றார் உலகத்தார் என்றுசொல்வோர்
அழுந்தட்டும் அறியாமை! அதையுணர்த்த
முழங்கிற்று பெரியாரின் முரசு ஒலி
அவ்வழி வந்தோன்...அன்பன்...தோழன்
அருமைச்செல்வம்.....அறிவியக்க வீரன்
ஞாயிற்றின் நல்லொளியில்
ஆயிற்று காலமென்று அகன்றுவிடக் கருக்கல்,
அங்கே...
கிழக்கினில் கிளம்பிய காலைக்கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான்...கடலில் என்றூல்,
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ!
இருள் நீங்கி ஒளிபெறவே இந்நாடு முந்துங்காலை
மருள் சூழ்ந்த சாவுமோகம் இளங்கதிரை
மறைத்ததுவே!

*　　*　　*

குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே!
கொன்றொழிக்கும் கொடுவாளால்...குள்ளநரி
ஆரியத்தை,
குலைபிடுங்க குகைவிட்டு வெளிவந்த சிங்க ஏறே!
மலைத்தோளா! மாணிக்கக் குன்றே!
ப்ழச்சுளை, உன்பேச்சு! பார்வையிலே பனிவீச்சு!

பார்ப்பனீயம் உனைப் பார்த்துவிட்டால்
படைகண்ட கோழைபோல் நிலைகுலைந்து போகுமே.
நீ போய்விட்டாய்...நின்னொடு நின் புகழ்போமோ?
தீ வைத்தாய் ஆரியக்காட்டில்! அது
படபடென வெடிக்கையிலே பார்க்காமல் மறைந்து
விட்டாய்.

பன்னீர்ச்செல்வமே! உன் பால்வடியும்
முகமெங்கே? பாண்டியன் மீசையெங்கே!
பசியேறிய வெறிகடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உனைத்தின்று!
" தின்னட்டும் தின்று மகிழட்டும்...என்னை
எண்ணட்டும் திருவிடத்தா'ரென்றே எங்கொளிந்தாய்?
பணத்தினில் பிறந்து பணத்தினில் வளர்ந்தும்
பாட்டாளிக் குணத்தினை எங்ஙனம் கற்றாய்?
கோமானே! யாம் அழுதழுது உகுத்த கண்ணீர்
ஓமான்கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்!
பழுதற்ற திராவிடப் பொன்னுடு! ஆரிய
மதுவுண்ட மக்களெல்லாம் விழித்தெழுதல்
இதுகாண்டல்...நின்பணிக்கு காணிக்கையாம்.
சுற்றி எதிர்ப்புகள் சூழ்வளியாய்ச் சீறிடினும்
வெற்றி எமக்கென்றே வெளிக்கிளம்பி விட்டோம்!
பஞ்சைகளல்ல நாங்கள் .....
தஞ்சைக் காவலன் சந்ததியார்!
வீழ்ந்திட நேரிடினும் நின் செயல்பாடி
வீழ்ந்திடுவோம்.

("முரசொலி" "மாலைமணி"யில், வெளிவந்த கட்டுரைகள்.)

அன்பன் அச்சகம், சென்னை-1.


எனைன்கே பிரிம்ஸாரின்
மலாமக்கா
BALU
BROS